

# கோயிலும், கோட்டையும் கட்டப்பட்ட காலம்



## கல்வெட்டுகளைக் கொண்டு ஆய்வு

இக்கோட்டையையும் கோயிலையும் சின்னபொம்மு நாயக்கன் கட்டியதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறியதை முன்னரே பார்த்தோம். நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி இக்கோயிலும் கோட்டையும் அவனால் அமைக்கப்பட்டவையா என்பதை அவன் காலத்தில் கல்வெட்டுகளைக்கொண்டே ஆராய்வோம்.

நமது இவ்வாராய்ச்சிக்கு உறுதுணையாக நிற்கும் ஆதாரங்கள் வேலூரைச் சுற்றியுள்ள இவன் காலத்திய கல்வெட்டுகளாகும். இக் கல்வெட்டுகள் யாவும் சின்ன பொம்மு நாயக்கன் என்பவனைப்பற்றிக் குறிப்பிடுகின்றன என்பதில் ஐயப்பாடு ஏதுமில்லை. ஆயினும் அவைகளே, அவன் ஒரு தனி அரசனாக இயங்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்டுகின்றன.

கிடைத்துள்ள இக் கல்வெட்டுகள் எட்டும் வேலூரில் உள்ள ஜ்வரகண்டேசுவரர் (ஜலகண்டேசுவரர்) எனும் கோயிலுக்கு 8 கிராமங்களைச் சின்ன பொம்மு நாயக்கன் என்பவன் விஜய நகர அரசர்களிடமிருந்து மானியங்களாகப் பெற்றுத் தந்துள்ளான் என்பதையே விவரிக்கின்றன.

இக்கல்வெட்டுகள் யாவும் படி எடுக்கப்பட்டுத் 'தென்னிந்தியக் கல்வெட்டுகள்' என்ற பதிப்பின் முதல் பகுதியில், பக்கம் 69 முதல் 77 வரையிலும் எண் 43 முதல் 51 வரையிலுமாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இக் கல்வெட்டுகள் யாவுமே வேலூர்க் கோயிலில் குடிகொண்டுள்ள இறைவனின் பெயரை 'ஜ்வ்ரகண்டேசுவரர்' என்றே குறிப்பிடுகின்றன. அதாவது ஜுரத்தை அழிக்கும் ஈசன்' எனப் பொருள் கொண்ட பெயராகும். காஞ்சிபுரத்தில் இப் பெயருள்ள ஈசனுக்குப் பல்லவர் காலக் கோயில் ஒன்று அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

'ஜுரகண்டேசுவரர்' என்ற பெயரே நாளடைவில் 'ஜலகண்டேசுவரர்' என மருவியதாகக் கூறுவர். அதன்படி இக்கல்வெட்டுகள் யாவும் இக்கோயிலைப் பற்றியே மறைமுகமாகக் குறிப்பிடுகின்றன என்னும் நிலையில் அவற்றைப் பற்றி மேலும் ஆராய்வோம்.

மேற்குறிப்பிட்ட 8 கல்வெட்டுகளில் முதல் நான்கும் ஒரே நாளில், அதாவது அட்சர வருடம் சக ஆண்டு 1488 (க்குச் சமமான கி.பி. 1566 இல்) சதாசிவ தேவ மகாராயர் என்ற விஜய நகர அரசனின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1542 - 1570) அமைக்கப்பட்டதாகும். இக்கல்வெட்டுகளின்படி வேலூர் சின்னபொம்மு நாயக்கன் என்பவனின் வேண்டுகோளுக்கிணங்க, ராமராஜனின் இளைய சகோதரரான 'மகாமண்டலேசுவரர் திருமலை தேவமகாராஜா' எனும் திருமலை ராஜா என்பவனால் 'சதாசிவ தேவமகாராயரின்' அனுமதி பெற்று இக் கிராமங்கள் வேலூர் ஜ்வரகண்டேசுவரர் கோயிலுக்கு மானியமாக வழங்கப்பட்டன என்பதைக் கூறுகின்றன. இக்கல்வெட்டுகளை நாம் தனித்தனியே ஆராய்வோம்.

'வேலூருக்கு அருகேயுள்ள அரப்பாக்கம் எனும் கிராமத்திலுள்ள கல்வெட்டு. [1]

**இக்கல்வெட்டின் தமிழாக்கம் :**

வேலூரைச் சேர்ந்த சின்னபொம்மு நாயக்கன் மகாமண்டலேசுவரரான இராமராஜ திருமலை தேவ மகாராயர் எனும் திருமலை ராயன் என்பவனிடம் விடுத்த வேண்டுகோளை அன்னார் சதாசிவ தேவமகாராஜர் பாதத்தில் வைக்க

1. எஸ். ஐ. பகுதி - 1, பக்கம் 70 எண் 43.



Scanned by CamScanner

(விண்ணப்பிக்க), அவர் அரப்பாக்கம் எனும் இவ்வூரை வேலூரில் உள்ள 'ஜ்வரகண்டேசுவரர் சுவாமிகள்' அவர்களுக்கு எல்லாவித உரிமைகளையும் அளித்து, அட்சய வருடம் கும்ப மாதம் சனிக்கிழமை துவாதசி திதி அன்று (12ஆம் நாள்) சக 1488 (க்குச் சமமான கி.பி. 1566 இல்) சதாசிவ தேவ மகாராயரின் விருப்பத்துடன் மானியமாக அளிக்கப்பட்டது என்பதாகும்.

**2. எஸ்.ஐ. பகுதி 1. பக்கம் 71 எண். 44 ***

இக்கல்வெட்டு, தற்போதைய அரியூர் என வழங்கப்படும் அருகூரில் உள்ள முருக்கேரி, சித்தேரி ஆகிய கிராமங்களை இக்கோயிலுக்கு மானியமாக வழங்கப்பட்டதை விவரிக்கின்றது.

**3. எஸ்.ஐ. பகுதி – 1, பக்கம் 71, 72 எண். 45 ***

இக்கல்வெட்டு வேலூருக்கு அருகில் உள்ள அரும்பரட்டி எனும் கிராமத்திலுள்ளது. இக் கிராமத்தை வேலூர்க் கோயிலுக்கு மானியமாக அளிக்கப்பட்டதை இதன் மூலம் அறிகிறோம்.

**4. எஸ்.ஐ. பகுதி – 1 பக்கம் 71, 72 எண் 46 ***

இக்கல்வெட்டின்படி வேலூருக்கு அருகேயுள்ள சதுப்பேரி எனும் ஊர் ஜ்வரகண்டேசுவரர் கோயிலுக்கு மானியமாக அளிக்கப்பட்டதை அறிகிறோம்.

அடுத்து வரும் மூன்று கல்வெட்டுகளும் ஒரே காலத்தில், அதாவது சக 1497 க்குச் சமமான கி.பி. 1575 இல் அமைந்தவை. இவை மகா மண்டலேசுவரரான ஸ்ரீ ரங்கதேவ மகாராயர் காலத்தைச் சேர்ந்தவையாகும்.

ஸ்ரீரங்க தேவர் என்பவர் கர்நாடக அரசரான முதலாம் ஸ்ரீரங்கராயர் ஆவார். இவரது செப்பேடுகள் இரண்டு, சக 1492 - 1506 ஆகிய வருடங்களைச் சேர்ந்தவை எனக் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இக் கல்வெட்டுகளும் வேலூரைச் சேர்ந்த சின்னபொம்மு நாயக்கன் வேண்டுகோளுங்கிணங்கி ஸ்ரீரங்க மகாதேவராயர் அவர்களின் சம்மதத்துடன் கிருஷ்ணப்ப நாயக்கன் என்பவனால் வேலூர் ஜ்வரகண்டேசுவரர் கோயிலுக்கு மானியமாக அளிக்கப்பட்ட மூன்று கிராமங்களைப் பற்றிக் கூறுகின்றன.

**5. எஸ்.ஐ. பகுதி – 1 பக்கம் 73, 74 எண். 47 ***

இக்கல்வெட்டு வேலூருக்கு அருகேயுள்ள சத்துவாச்சாரியில் அமைந்துள்ளது. இச் சத்துவாச்சாரி கிராமத்தை வேலூர்க் கோயிலுக்கு மானியமாக வழங்கப்பட்டதை இது குறிப்பிடுகின்றது.



Scanned by CamScanner

6. **எஸ்.ஐ. பகுதி – 1, பக்கம் 74, 75, எண். 48**

இக் கல்வெட்டு, வேலூருக்கு அருகேயுள்ள சமங்கிநல்லூர் எனும் ஊரில் அமைந்துள்ளது. தற்போது சமங்கி நெல்லூர் என அழைக்கப்படும் செண்பகப்பெருமாள் நல்லூர் என்னும் கிராமத்தை இக்கோயிலுக்கு மானியமாக வழங்கப்பட்டதைக் கூறுகிறது.

7. **எஸ்.ஐ. பகுதி 1, பக்கம் 75 எண். 49 ***

வேலூருக்கு அருகேயுள்ள பெருமுகை என்னும் இடத்திலுள்ள இக்கல்வெட்டு, பெருமுகை என்னும் இக்கிராமத்தை வேலூர் கோயிலுக்கு மானியமாக அளித்துள்ளதைக் குறிப்பிடுகின்றது.

8. **எஸ்.ஐ. பகுதி – 1 பக்கம் 76 எண் 50 ***

வேலூருக்கு அருகேயுள்ள சேக்கனூர் 'என்னும் இடத்தில் அமைந்துள்ள இக்கல்வெட்டு, சேக்கனூர் எனும் கிராமத்தை வேலூரில் உள்ள ஜலகண்டேசுவரர் சாமிக்கு காலசந்தி பூஜைக்கு மானியமாக விடப்பட்டதைக் குறிப்பிடுகிறது.

9. **மேலும் ஒரு கல்வெட்டு, சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.** தற்போதைய திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் ஆரணி வட்டத்தில் உள்ள முருகநந்தல் எனும் ஊரில் இக்கல்வெட்டு அமைந்துள்ளது. கி.பி. 1595 ஆம் ஆண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டு கூறும் செய்தி, வேலூர் நாகம நாயக்கர் குமாரர் பொம்மி நாயக்கர், முருகநந்தல் எனும் கிராமத்தை வேங்கடபதிராயரிடம் பெற்று, ஆரணியில் உள்ள கைலாச நாத சுவாமிக்கு நாகமநாயக்க ஐயனுடைய புண்ணியமாக (மானியமாக) விட்டுள்ளான் என்பதே இக்கல்வெட்டின் சாரம்.

சின்ன பொம்மு நாயக்கனின் கடைசி ஆட்சி ஆண்டாக கி.பி. 1595 ஆம் வருடத்திய இக் கல்வெட்டும் தன் தந்தையின் நினைவாக முருகநந்தல் எனும் கிராமத்தை விஜயநகர அரசனான வேங்கடபதி என்பவனின் அனுமதி பெற்றே மானியமாக அளித்துள்ளான்.

10* **அடுத்தது செஞ்சியை ஆண்ட அச்சுதராயன் காலத்திய கல்வெட்டாகும்[1].**

இந்தக் கல்வெட்டு சின்ன பொம்மு நாயக்கனின் சகோதரனான பொம்மு நாயக்கனைப் பற்றிக் குறிப்பிடுவதாகும்.

இக் கல்வெட்டில் வையப்பன் என்பவனைப் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றது. வையப்ப நாயக்கன் என்பவன் துபாகி கிருஷ்ணப்ப நாயக்கனுக்குப் பின்பு செஞ்சியை 1526 முதல் 1541 வரை ஆட்சி செய்தவன் என்பதை இக் கல்வெட்டின் செய்தியிலிருந்து கணிக்க வேண்டியுள்ளது.

1. வி. ஆர். பக். 127 - 1906



Scanned by CamScanner

திருவண்ணாமலைக்கு அருகே ஜம்பை என்னும் ஊரில் உள்ள கி.பி. 1530 ஆம் ஆண்டைச் சேர்ந்த பொம்மு நாயக்கன் காலத்திய கல்வெட்டு கூறும் செய்தியைக் கவனிப்போம்.

வையப்ப நாயக்கனின் உத்தரவுப்படி வேலூர் 'பொம்மு நாயக்கன்' ஜம்பையிலுள்ள சிவன் கோயிலுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்ட மானியத்தை அளித்துள்ளான் என்பதே இதன் சாராம்சமாகும்.

11* **கி.பி. 1532 ஆம் ஆண்டைச் சேர்ந்த மற்றுமொரு கல்வெட்டு.** இதுவும் செஞ்சி அரசனான வையப்ப நாயக்கன் காலத்தியதே. இக்கல்வெட்டும் வையப்ப நாயக்கனின் உத்தரவுப்படி 'பொம்மு நாயக்கன்' திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள பள்ளிச்சாண்டாள் என்ற கோயிலுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டு மானியம் வழங்கினான் எனக் கூறுகிறது.

12* **ஆர்க்காட்டிற்கு அருகேயுள்ள அடையபுலம்** (அடையபலம் எனக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது) எனும் கிராமத்திலுள்ள காளகண்டேசுவரர் கோயிலில் சின்ன பொம்மு நாயக்கன் காலத்திய கல்வெட்டு ஒன்று உள்ளது. சக 1504 (-க்குச் சமமான கி.பி. 1582) ஆண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டில், அப்பைய தீட்சிதர் எனும் சின்ன பொம்மு நாயக்கனின் போற்றுதலுக்குரிய வித்வான், அக்கோயிலை (காளகண்டேசுவரர் கோயிலைக்) கட்டியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 500 மாணவர்களைக் கொண்ட கலாசாலை ஒன்றும் அப்பைய தீட்சிதரால் நிறுவப்பட்டதாக அக்கல்வெட்டின் மூலம் அறிந்தோம்.

இதுவரை நாம் பார்த்த கல்வெட்டுகள் இரண்டு, ஒன்று 'பொம்மு நாயக்கனையும் மற்றொன்று 'சின்னபொம்மு நாயக்கனைப்' பற்றியும் குறிப்பிடுபவை. இனிவரும் கல்வெட்டுகள் இரண்டும் அவனது மகனான லிங்கம நாயக்கனின் பெயரைக் குறிப்பிடுபவை. நமது ஆய்வுக்கு அவைகளும் அவசியமானதால் இங்கே குறிப்பிடுகிறோம்.

**13. கல்வெட்டு எண். 70 – 1887**

கி.பி. 1601 ஆம் வருடம் மே மாதம் 9 ஆம் தேதியைச் சார்ந்த இக்கல்வெட்டு, குடியாத்தம் வட்டத்தில், 'மலையப்பட்டு' எனும் ஊரில் உள்ள 'வீரக்கோயிலில்' அமைந்துள்ளது. இக்கல்வெட்டு 'சின்னபொம்மு நாயக்கனின்' மகனான லிங்கம நாயக்கனின் வேண்டுகோளுக்கு இணங்கி, 'வேங்கடபதி' அரசன் இக்கோயிலுக்கு அளித்த மானியத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறது.

14* **கி.பி.1602ஆம் ஆண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டு*** புகழ்பெற்ற'விளாப்பாக்கம் மானியம்' ஆகும். முதலாம் வேங்கடபதி மகாராயன் லிங்கம நாயக்கனுக்கு

11. செஞ்சிக் கோட்டை வரலாறு, ஏ. கே. சேஷாத்திரி (சேகர் பதிப்பகம் 1994)
12. வி.ஆர்.பக். 395 - 1911
14. இந்தியப் பழம்பொருள் - பாகம் 2 பக்கம் 371 ● எ.இ.தொகுதி 4, பக். 271



Scanned by CamScanner

'விளாப்பாக்கம்' கிராமத்தைத் தங்கக் காசு வைத்துத் தாரை வார்த்து மானியமாக அளித்ததைப் பற்றி இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

**கல்வெட்டின் சாரம்**

வெற்றித்திருமகனும் சூரியனையொத்தவனும் ஸ்ரீ நெல்லட்டூரில் கோயில் கொண்டுள்ள வீரக்கடவுளிடம் மாறாத பக்தி கொண்டவனும் சான்றோர்களைக் கவர்ந்தவனும், வள்ளாளராயனை அடக்கியவனும், மகாதேவர்கள் மற்றும் மாது தேவர்களும் (பிராமணர்கள்) ஆகிய சிவனடியார்களை வாழவைப்பவனும், அங்குல கோத்திரத்தைச் சேர்ந்தவனுமான லிங்க (ம) நாயக்கனுக்கு அவனது வேண்டுகோளின்படி புகழ்வாய்ந்த மாமன்னரான 'வேங்கடபதி' மகாராயர் முழு மனதுடன் தங்கக்காசு வைத்துத் தாரை வார்த்து அளித்த மானியம் (விளாப்பாக்கம் கிராமம்)

மேற்கூறிய பதினான்கு கல்வெட்டுகளும் வேலூர் நாயக்க மன்னர்கள் எனப்படும் பொம்மு நாயக்கன், சின்ன பொம்மு நாயக்கன், லிங்கம நாயக்கன் ஆகிய மூவரும் கோயில்களுக்கு விஜயநகர அரசர்களிடமிருந்து பெற்றுத்தந்த மானியங்களைப்பற்றிக் குறிப்பிடுகின்றன.

மானியங்களை விஜயநகரப் பேரரசிடமிருந்து பெற்றுத் தந்துள்ளதால், இவர்கள் தனி அரசர்களாகவோ சிற்றரசர்களாகவோ தனித்திருக்கவில்லை என்பதும், நாடும் நிலமும் இவர்களுக்குச் சொந்தமில்லை என்பதும் புலனாகின்றன. இவர்கள் தளபதிகளாக (ஆளுநர்களாக) வேலூரில் அதிகாரத்தில் இருந்திருக்கின்றனர் என்றே புலனாகின்றது!

கி.பி. 1530 மற்றும் 1532 ஆகிய இரு ஆண்டுகளைச் சேர்ந்த செஞ்சி அரசனான வையப்ப நாயக்கனின் காலத்திய வெவ்வேறு கல்வெட்டுகள், பொம்மு நாயக்கன் என்பவன், அவ்வமயம் செஞ்சி நாயக்கர்களின் தளபதியாக இருந்திருக்கிறான் என்பதையும், எனவேதான் அவன் அவ்வமயங்களில் வையப்ப நாயக்கனது உத்தரவுப்படி கோயில்களுக்கு மானியங்களாக அளித்திருக்கிறான் என்பதும் புலனாகிறது.

பின்பு சின்ன பொம்மு நாயக்கன் என்பவன், 'திருமலைராயனின்' மூலமாகச் சதாசிவதேவமகாராயரின் கீழும் (கி.பி. 1542-1570),அதன் பின்னர் கிருஷ்ணப்ப நாயக்கன் மூலமாக ஸ்ரீ ரங்கதேவ மகாராயரின் கீழும் ஆளுநராகவே பணியாற்றியிருக்கிறான் என்பது மற்ற கல்வெட்டுகள் கூறும் செய்திகள் ஆகும்.

இத்தகைய நிலையில் (வேலூர்) இம்மாபெரும் கோட்டையையும் கோயிலையும் இச்சின்னபொம்மு நாயக்கன் கட்டியிருக்க சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது. மானியங்களை அளிக்கவே இவன் மேலிடத்தை



Scanned by CamScanner

அணுக வேண்டியிருந்த நிலையில், கோயிலையும் கோட்டையையும் கட்டக்கூடிய இவனது அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது என்பது புலனாகிறது.

**மானியங்கள் பெற்று அளித்ததையே கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ள இவர்கள் மாபெரும் சாதனையான கோயிலையும், கோட்டையையும் கட்டியதைக் கல்லில் வெட்டாமல் விட்டிருப்பார்களா ?**

*** கோயிலுக்கு இவர்கள் மானியங்களைப் பெற்றுத் தந்தனர் என்பதிலிருந்து இக்கோயில் இங்கு இவர்கள் காலத்திற்கு (கி.பி. 1566) முன்பே (வேறு ஒருவரால்) கட்டப்பட்டிருக்கவேண்டும் என்பது உறுதியாகிறது.**

ஆகவே* இக்கோயிலையும் கோட்டையையும் கட்டியவர்கள் யார் என்பதைப்பற்றிய ஆராய்ச்சியில் இனி இறங்குவோம். இதற்கு உறுதுணையாக, சமீபத்தில் சில ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அவற்றின் துணைகொண்டு வரலாற்று உண்மைகளைக் காண விழைவோம்.

* கோட்டையின் தென்கிழக்கு மூலையில் சுவரின் வெளிப்புறத்தில் அமைந்துள்ள தெலுங்கு, தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தனித்தனியே ஒன்றின் கீழ் ஒன்றாகக் காணப்படும் கல்வெட்டு ஒன்று சமீபத்தில் நம்மால் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கல்வெட்டையும், இக்கோயில் கோட்டைக் கட்டடக் கலைகளையும் ஆராய்ந்து இவற்றின் காலத்தை நிர்ணயிக்கலாம்.

அவ்வாறாக நாம் ஆய்வு செய்வோமேயானால், இங்குள்ள கோட்டை, கோயில் இரண்டுமே வெவ்வேறான தனித்தனி கால கட்டங்களில் இருவேறு பேரரசுகளைச் சேர்ந்த அரசர்களால் உருவாக்கப்பட்டவை என்பது புலனாகிறது.

முதலில் சம்புவராயர் ஆட்சிக்காலத்தில் சிறிய அளவில் அமைக்கப்பட்ட தற்போதைய கோயிலின் உட்பகுதியும் கோட்டையின் உள்மதிற்சுவரும், பின்பு விஜயநகரப் பேரரசு ஆட்சிக்காலத்தில் விரிவாக்கப்பட்டுள்ளன.

இதனைப்பற்றிய விவரமான வரலாற்று உண்மைகளை, கிடைத்துள்ள ஆதாரங்களைக் கொண்டு அறியலாம்.



Scanned by CamScanner

## முதலில் தோன்றிய சம்புவராயர் காலத்திய கட்டடங்கள்!

### கட்டடக்கலை ஆதாரம்

சம்புவராய அரசர்கள் கிட்டத்தட்ட தொண்டைமண்டலம் முழுவதும் சுமார் இருநூறு ஆண்டுகாலம் (கி.பி. 13 - 14 ஆம் நூற்றாண்டுகளில்) அரசாட்சி செய்திருக்கின்றனர் என்பதை அவர்களது காலக் கல்வெட்டுகள் மற்றும் வரலாற்றுச் சான்றுகள் மூலம் அறிகிறோம். அவர்கள் 'இம்மண்ணின் மைந்தர்கள்' என்பதும், கோட்டைகள் கட்டுவதிலும், கோயில்கள் பல எடுப்பிப்பதிலும் சோழர்களுக்கீடாகச் சிறந்து விளங்கினர் என்பதையும்கூட இவ்வரலாற்றுச் சான்றுகள் நமக்கு எடுத்து உரைக்கின்றன.

இச்சம்புவராய அரசர்களில் முக்கியமாக முதலாம் ராஜநாராயணச் சம்புவரையரும், ஏகாம்பர நாத குலசேகர சம்புரவராயரும், அவரது மகனான வென்று மண்கொண்ட சம்புவராயரும் கோயில் கட்டும் பணியில் மிகவும் கீர்த்தி பெற்ற அரசர்களாக விளங்கினர்.

இவர்கள் காலத்தில் வேலூரைச் சுற்றிலும் அதன் அருகேயுள்ள ஊர்களிலும் சற்றேறக்குறைய இருபது கோயில்கள் கட்டப்பட்டுள்ளன என்பதைக் கல்வெட்டுகள் மூலம் அறிந்து அதிசயிக்கின்றோம்.

சோழ மன்னர்களிடம் இவர்கள் போர்த்துறையில் மட்டுமன்றிக் கலைத்துறையிலும் பயிற்சி பெற்றிருக்கின்றனர் என்பதை இவர்கள் பின்பற்றியுள்ள கட்டடக் கலைப்பாணியினைக் கொண்டு அனுமானிக்கலாம். ஏனெனில் இவர்களது காலக் கோயிற் கட்டடக் கலைகள் பிற்காலச் சோழர் கலைப்பாணியிலேயே அமைந்துள்ளன.

* வேலூர்ப் பகுதி சற்றேறக்குறைய இருநூறாண்டுக் காலம் இச் சம்புவராயர்களின் ஆட்சியின் கீழ் இருந்ததாலும் வேலூர் 'ஜலகண்டேஸ்வரர்' கோயிலின் உள்கோயில் பகுதி இவர்களது காலக்கட்டடக் கலைப்பாணியில் அமைந்துள்ளதாலும், வேலூரைச் சுற்றி விரிஞ்சிபுரம், வந்தவாசி, செய்யாறு, படைவீடு, பள்ளி கொண்டா, காங்கேயநல்லூர் போன்ற இடங்களில் இவர்களால் கட்டப்பட்ட கோயில்கள் பல காணப்படுவதாலும், அவைகளில் பல இதே கட்டடக் கலைப்பாணியைக் கொண்டிருப்பதாலும், இங்குள்ள கோயிலின் (ஜலகண்டேஸ்வரர்) உட்பகுதி அனேகமாக இவ்வரசர்களுள் ஒருவரான (வென்றுமண்கொண்ட சம்புவராயன்) காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று வரையறுத்துக் கூறலாம்.

### சதாசிவ தேவ மகாராயரின் விரிவாக்கப் பணிகள்

இக்கோயிலின் மதிற்சுவர்கள், கோபுரங்கள், கல்யாணமண்டபம் போன்ற கலை அழகு மிளிரும் கட்டடப்பகுதிகள் மட்டும் 16 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் சதாசிவ தேவ மகாராயர் (கி.பி. 1542 - கி.பி. 1570) என்ற விஜயநகரப் பேரரசரால் சம்புவராயர் காலத்திய இக்கோயிலுடன் இணைத்து விரிவு படுத்தப்பட்டது என்றும் கூறலாம்.



Scanned by CamScanner

சதாசிவ தேவராயரின் காலத்தில் நடந்த இப்பணிகள் அவ்வமயம் வேலூரில் தளபதி (தலைமை) யாக இருந்த சின்னபொம்மு நாயக்கனின் மேற்பார்வையில் நடந்திருக்க வேண்டும்.

அதேபோன்று இங்குள்ள கோட்டையின் உள் மதிற்சுவர்ப் பகுதியும், வெளி மதிற்சுவருடன் கூடிய அகழிப்பகுதியும் கட்டடக்கலைப் பாணியில் இருவேறு காலத்தில் அமைந்தவை எனக் கூறலாம். ஆகவே கோயிலைப் போன்றே சம்புவரையர் காலத்தில் அமைக்கப்பட்ட உள்கோட்டைப் பகுதிக்கு, சதாசிவ தேவ மகாராயர் (விஜய நகர மன்னர்) காலத்தில் வெளிமதிற்சுவரும் அகழியும் இணைத்துக் கட்டப்பட்டிருக்க வேண்டும் எனக் கொள்ளலாம்.

சமீபத்தில் கோட்டைச்சுவர் மீது நாம் கண்டுபிடித்ததாகக் கூறிய 'மீசுர கண்ட கொத்தளம்' என்ற தமிழ் தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் உள்ள சதாசிவ தேவ மகாராயர் காலத்திய கல்வெட்டு, வெளிச்சுவருடன் கூடிய அகழிப் பகுதியை அவர் அமைத்திருக்கவேண்டும் என்ற நமது மேற்கூறிய கருத்தை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ள ஆதாரமாகும்.

வெளி மதிற்சுவரின் கட்டடக்கலையை நாம் சற்று ஊன்றிக் கவனிப்போமேயானால் அங்கு அவை மிகவும் நுட்பமான வேலைப்பாடுகளுடன் விஜய நகரப்பாணியில் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அதே சமயம் உள்கோட்டைச் சுவர், மிகவும் சாதாரணமாகச் சம்புவரையர் காலக் கலைப்பாணியைக் கொண்டு அமைந்திருப்பதையும் உணரலாம்.

**கல்வெட்டு கூறும் ஆதாரம்**

ஆகவே இவ்விரண்டு தனித் தனியான கட்டடக் கலைகளும், இவை இரண்டு அரசர்களால் இரு வேறு காலத்தில் அமைக்கப்பட்டவை என்ற நமது கருத்தினை உறுதி செய்வதாக அமைந்துள்ளது. 'மீசுரகண்ட' (கட்டாரி) கொத்தளம்' எனும் கல்வெட்டில், 'மீசுரகண்ட' என்பதற்கு 'கர்வம்கொண்ட எதிரிகளுக்கு இவன் கத்திபோன்றவன்' எனப் பொருள், 'கொத்தளம்' என்றால் 'அகழிப் பகுதி' என்று பொருள்.

'மீசுர கண்ட கொத்தளம்' என்ற கல்வெட்டில் உள்ள சொல்தொடரில் 'மீசுர கண்ட' என்ற சொல் பதினான்காம் நூற்றாண்டுமுதல் பதினாறாம் நூற்றாண்டுக்குள் அரசாண்ட நான்கு அரசர்களின் மெய்க்கீர்த்திகளில் காணப்படுகின்றது.

**'மீசுரகண்ட கொத்தளம்' - கல்வெட்டு**



அவை :

1. சாளுவமங்கு தேவமகாராசர் கி.பி. 1371

இடம் : வில்லியனூர் (புதுச்சேரி) திருக்காமீசுவரர் கோயில் மகாமண்டபத் தென்சுவர் அதிட்டான முகப்பட்டைக் குமுதம்.

மன்னன்: சாளுவமங்கு தேவ மகாராசர்

ஆட்சி ஆண்டு : கி.பி. 1371

க.ஆ.அ. எண். 191 / 1936 - 37*

'ஸ்விஸ்தி ஶ்ரீ மது மகாமண்டல அரண் மேதினி, மீசுர கண்ட கட்டாரி சாளுவ சம்புவராய ஸ்தாபநாசாரிய திருபுவனசாயி ஸ்தாப'

2. சாளுவசாவண தேவ மகாராசர் கி.பி. 1374 க.ஆ.அ. எண் : 195 / 1936 - 37

1. பிரமாதி வருஷம் புரட்டாசி மாதம் யஉ - தியதி ஶ்ரீமணு மகா மண்

2. டலீசுர மேதினி மீசுரக் கண்டக் கட்டாரி சாளுவ திருபுவன் இ

3. ராய கண்டர கூளி சம்புவராய ஸதாபநாசாரிய தெஷண சூரத்தா.

3. கிருஷ்ணதேவ மகாராயர் கி.பி. 1510 - 1529

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் போளூர் வட்டம் சவரம்பூண்டியில் மேல்நிலைப் பள்ளி விளையாட்டுத் திடலில் உள்ள கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள கிருஷ்ணதேவ மகாராயரின் மெய்க்கீர்த்தி (கி.பி. 1520):

1. ஸ்வஸ்திஶ்ரீ
2. ஶ்ரீமன் மஹாம
3. ண்டலீசுவர
4. ன் மேதினி மீசுர
5. கண்ட கட்டாரி
6. சாளுவன் இராச
7. பரமேஸ்வரன் அரிய

* வரலாற்றில் வில்லியனூர் - புலவர் ந.வேங்கடேசன்; பக். 160 (சேகர் பதிப்பகம்)



Scanned by CamScanner

## 4. சதாசிவ தேவ மகாராயர் கி.பி. - 1542 -1570

சதாசிவ தேவ மகாராயரின் மெய்க்கீர்த்தி வருமாறு (கி.பி.1542- 1570)

ஸ்சுபமஸ்து

ஸ்வஸ்திஸ்ரீ

ஸ்ரீமன் மகாமண்டலேசுவர மேதினி மீசுர

கண்ட கட்டாரி சாளுவ அரியராய விபாடன்

பாஷைக்குத் தப்புவராய....

இவர்களில் ஏற்கனவே சம்புவராயர் காலத்தில் கட்டப்பட்டிருக்கும் இக்கோயிலையும் கோட்டையையும் விரிவுபடுத்தியவர் 'சதாசிவ தேவமகாராயர்' என நாம் வரையறுத்துக் கூறுவதற்கு மூன்று காரணங்கள் உள்ளன.

★ முதலாவதாக, இக்கோயிலும் கோட்டையும் 'சின்ன பொம்மு நாயக்கன்' காலத்தில் உருவானவை என வழங்கப்பட்டு வருவதால், அவரது காலத்தில் விஜயநகர பேரரசராக இருந்தவர் சதாசிவ தேவமகாராயரே. அதன்படி இக் கோயிலும் கோட்டையும் விரிவுபடுத்தப்பட்ட காலங்கள் இவ்விருவரது காலத்துடன் ஒத்துப்போகின்றன.

★ மூன்றாவதாக, சின்ன பொம்மு நாயக்கர் என்ற தளபதியின் வேண்டுகோளுக்கிணங்கி, கி.பி. 1566 இல் இக்கோயிலுக்கு மானியங்களை அளித்தவரும் விஜயநகர மன்னரான இச்சதாசிவதேவ மகாராயரே. ஆகவே இவரால் விரிவாக்கப்பட்ட இக்கோயிலுக்கு இவரே மானியங்கள் அளித்துள்ளார் எனக் கொள்ளலாம்.

★ இவ்வாறு 'மீசுரகண்ட கொத்தளம்' என்ற கல்வெட்டுக் குறிப்பிலிருந்து மட்டுமன்றி இவர் ஆட்சி செய்த காலம், மற்றும் கோயிலுக்கு அளித்த மானியங்கள் ஆகிய செய்திகளையும் கருத்தில் கொண்டு இக் கோயிலை விரிவாகக் கட்டியவர் சதாசிவ தேவ மகாராயரே எனக் கூறலாம். கல்வெட்டுகள் மட்டுமன்றிக் கோயிலின் இரண்டாவது கோபுரத்தின் விதானத்தில் தற்சமயம் சிதைந்த நிலையிலுள்ள ஓவியங்களிடையே சமீபத்தில் நம்மால் கண்டுபிடிக்கப்பட்ட மற்றுமொரு ஆதாரமான 'கொண்(ட)ல பள்ளி போதையன தாகிதா' என வண்ணத்தால் தெலுங்கு மொழியில் தீட்டப்பட்டுள்ள எழுத்துகள் கூறும் செய்தியினைப் பார்ப்போம்.

### ஓவியக் கலையின் ஆதாரம்

'கொண்டலபள்ளி' என்பது விஜயவாடாவில் உள்ள ஓர் ஊர் என்றும், 'போதையன்' என்பது அவ்வூரைச் சேர்ந்த ஒருவனது பெயர் என்பதும், 'தாகிதா'

* மெய்க்கீர்த்திகள் - பு. சுப்ரமணியன், பக். 285



Scanned by CamScanner

என்றால் அவனுடைய அல்லது அவனால் உருவாக்கப்பட்டது என்றும் பொருள். ஆகவே இங்குள்ள ஓவியங்கள் கொண்டலபள்ளியைச் சேர்ந்த போதையன் என்பவனால் தீட்டப்பட்டது என்பது தெளிவாகிறது. இதன் காலம் 16 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி என அறிஞர்கள் கணித்துள்ளனர்.

ஆகவே, இக்காலமும் சதாசிவதேவ மகாராயரின் (கி.பி. 1542 - 1570) காலத்துடன் இணைகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். சதாசிவ தேவமகாராயர் கட்டிய இக்கோபுரத்தில் வண்ண ஓவியங்களைத் தீட்டியவன் கொண்டல பள்ளியைச் சேர்ந்த போதையன் என்பவனாவான்.

**நாயக்க மன்னர் சிற்ப உருவங்கள் !**

கோயிலின் முதல் கோபுர நுழைவாயிலின் இரண்டாவது நிலையில் வலது தூணில் (மேற்குப்புறம்) நாயக்க மன்னர் உருவங்கள் இரண்டு உள்ளன. அவ்விரண்டு உருவங்களும் இக்கோயிலைக் கட்டிய பொம்மிரெட்டி திம்மிரெட்டி ஆகிய சகோதரர்கள் எனப் பரம்பரையாகக் கூறிவருகின்றனர். இது உண்மையானதல்ல; ஆதலால், இதைப்பற்றியும் நாம் சற்றே ஆராய்வோம்.

இவ்விரண்டு புடைப்புச் சிற்ப வடிவிலுள்ள அரச உருவங்களில் ஒன்று உயரமாகவும் ஆஜானுபாகுவாகவும், மற்றொன்று சிறியதாகவும் அடக்க பாவத்துடனும் அமைக்கப்பட்டுள்ளன. இவை விஜயநகர நாயக்க மன்னர்களுக்கே உரித்தான பாணியில் ஆடை ஆபரணங்களுடன் கூடியும், தலைக்கட்டுடனும், கைகளைக் கூப்பியவாறும் நின்ற கோலத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.

இத்தகைய உருவங்கள் இக்கோயிலில் இவ்விடத்தில் மட்டுமன்றி, மேலும் இரண்டு இடங்களில் அமைந்துள்ளன என்பது அநேகருக்குத் தெரிய நியாமில்லை.

இக் கோபுரவாயில் தூண் மீதுள்ளதைத் தவிர, வெளிப் பிராகாரத்தின் வடமேற்கு மூலையில் அமைந்துள்ள சிம்மக்கிணற்றின் அருகாமையில் உள்ள வசந்த மண்டபத்தூண் ஒன்றிலும், இதே பிராகாரத்தின் தென்கிழக்கு மூலையிலுள்ள உற்சவ மண்டபத்தூண் ஒன்றிலும் இதே போன்ற உருவங்கள் பெரிதும் சிறிதுமாகக் கை கூப்பி நின்றகோலத்தில் புடைப்புச் சிற்பங்களாகக் காணப்படுகின்றன.

★ அதிசயிக்கத்தக்க வகையில் இச்சிற்பங்கள் மூன்றும் சதாசிவ தேவமகாராயரால் விரிவுபடுத்தப்பட்ட வெளிப் பிராகாரத்திலேயே அமைந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.



Scanned by CamScanner

இச் சிற்பங்களில் உயர்ந்து காணப்படும் அரச உருவம் 'சதாசிவதேவ மகாராயர்' என்றும் அவர் அருகில் சிறிய உருவமாகக் காட்சி அளிப்பவர் 'சின்ன பொம்மு நாயக்கன்' என்றும் கூறலாம்.

'சதாசிவ தேவ மகாராயர் விஜயநகரப் பேரரசர் என்பதால் அவரது உருவத்தைப் பெரிய அளவிலும் அதேசமயம் சின்ன பொம்மு நாயக்கன் அவ்வரசனின் கீழ் மேலதிகாரி (தளபதி)யாக இருந்தார் என்பதால், அவரது உருவத்தைச் சிறியதாகவும் வடித்துள்ளனர் என்பதை நாம் உணர்ந்து மனதில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு கோடி காட்டிப் புரிய வைக்கும் கலையைக் கையாண்டுள்ள சிற்பிகள் பாராட்டுக்குரியவர்கள். சிற்பிகளின் இத்திறமையை எண்ணி நம்மால் வியக்காமல் இருக்க முடியவில்லை.



சின்ன பொம்மு நாயக்கர் சதாசிவ தேவ மகாராயர்

இவை தவிர, கல்யாணமண்டபத்தின் கூர்ம மேடைக்கு முன்பாக விதானத்தில் அமைந்துள்ள விரிந்த தாமரை போன்ற அமைப்பின் மேற்கில் உள்ள இரண்டாவது வரிசையில், நடுவில் இருக்கும் மயில்மீது அமர்ந்த முருகர் படம் அமர்ந்த முருகப் பெருமானின் இருப்பக்கங்களிலும் கூப்பிய கரங்களுடன் சதாசிவதேவ மகாராயரும் சின்ன பொம்மு நாயக்கனும் சிற்பங்களாக மிக அழகிய முறையில் உருவகப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

கோயிலின் உட்பகுதி இவர்கள் காலத்திற்கு முன்பே அமைக்கப்பட்டு விட்டபடியால் அப்பகுதிகளில் இத்தகைய (விஜயநகர நாயக்க மன்னர்களின்) உருவம் ஏதும் இல்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இவர்களால் கட்டப்பட்ட பகுதியில் மட்டுமே தங்களது உருவங்களைப் பொறித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே இவையனைத்து ஆதாரங்களையும் மனதில்கொண்டு கட்டடக் கலையையும் சேர்த்து ஆராய்ந்து பார்க்கும்போது நமக்குத் தோன்றிய முடிவான (அனைவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய) கருத்து இதுவே.

o 'இவ்வூரில் உள்ள அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கோயிலின் உட்பகுதியும் உட்சுவருடன் கூடிய உள் கோட்டைப் பகுதியும் 'வென்று மண்கொண்ட சம்புவராயர்' காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

o 'அதன்பின்பு, விஜயநகரப் பேரரசரான சதாசிவ தேவ மகாராயரால் கி.பி. 1542 முதல் 1565 க்குள் அவை விரிவுபடுத்தப்பட்டன என்பதும் இக்கருத்தில் அடங்கும். அவ்வாறாக, திருப்பணி நடக்கும் சமயம் சின்னபொம்மு நாயக்கன் எனும் தளபதி வேலூரில் அவற்றை மேற்பார்வை செய்திருக்கக்கூடும்.'



Scanned by CamScanner